செ.வெ.எண்:21 நாள்:11.01.2018

# அரியலூர் மாவட்டத்தில் 4 நபர்களுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலைக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.01.2018) வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 4 நபர்களுக்கு கருணை அடிப்படையில் அரசு வேலைக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (11.01.2018) வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலகில் பணிபுரிந்த அரசு ஊழியர்கள் பணியிடையே காலமானோரது வாரிசுதாரர்களான இரா.அன்பரசன், கே.தெய்வாளை, ர.மீனா, க.நா.அபிமன்யு ஆகியோருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிக்கான ஆணைகளையும் மற்றும் ப.இராஜகுமாரி, சி.சுப்ரமணியன் ஆகியோருக்கு அலுவலக உதவியாளர் நிலையிலிருந்து இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வுக்கான ஆணையிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின்போது, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை ஜி.கே.லோகேஷ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) க.சிவக்குமார், அலுவலக மேலாளர் தமிழரசு ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**